2001 செப்டம்பர் 13]

87—

குடிநீர் வசதி

***1266—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி நாகமரை ஊராட்சி, நெருப்பூர் முத்தான் தெரு, அதைச் சுற்றியுள்ள தெருக்களில் போதுமான குடிநீர் வசதியில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி நாகமரை ஊராட்சியைச் சேர்ந்த நெருப்பூர் முத்தான் தெரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்கள் நெருப்பூர் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பில் தற்போது ஒரு லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் சராசரியாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சீரான குடிநீர் விநியோகம் மூலம் குடியிருப்பின் அனைத்து பகுதிகளுக்கும் போதுமான அளவு குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இக்குடியிருப்பில் 8 கையிறைப்பான்களும் அதில் ஒரு கையிறைப்பான் முத்தான் தெரு பகுதியிலும் உள்ளது. எனவே இப்பகுதிகளுக்கு தனியாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசையிறைப்பான் திட்டம் மேற்கொள்ளும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நெருப்பூரிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருப்பது என்பது உண்மை. ஆனால் அந்த நெருப்பூரை அடுத்துள்ள முத்தான் தெரு என்பது அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினுடைய உயரத்தைவிட மேடான பகுதியிலே இருக்கின்ற காரணத்தினாலே அங்கே நீர் ஏறுவது கிடையாது. பொதுமக்கள் எல்லாம் மிகவும் சிரமத்துக்கு ஆளாகிறார்கள். அந்த மேட்டுப்பகுதியிலே காலனி

பகுதியும் இருக்கிறது. அங்கே குடிநீர் கஷ்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதிக்கு தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டினாலொழிய அங்கே குடிநீர் வசதி பெற இயலாத நிலையிலே இருக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைத்துக் கொடுப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேநேரத்திலே இந்தக் கேள்வி என்பது ஆரம்ப காலத்திலே கொடுக்கப்பட்டது. இப்போது என்னுடைய தொகுதி முழுவதும் கடுமையான வறட்சியினாலே மழையில்லாத காரணத்தினாலே குடிநீர் பஞ்சம் அதிகமாக நிலவுகிறது. அது கரடுமுரடான பகுதி, எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. நேற்றுகூட நான் அமைச்சர் அவர்களிடத்திலே பேசுகிற நேரத்திலே குடிநீர் கஷ்டத்தைப்பற்றி தெளிவாக எடுத்துச் சொன்னேன். ஆகவே வறட்சிப் பகுதியான அந்தப் பகுதிக்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையிலே குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நெருப்பூர், தருமபுரி மாவட்டம் பற்றியது. வினா எண் 88, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

88—

மேம்பாலம்

***2596—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS